செய்தி வெளியீடு எண்: 252 நாள்: 12.04.2019

# செய்தி வெளியீடு

இன்று (12.04.2019) தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாகு, இ.ஆ.ப., அவர்கள் தேர்தல் பணிகள் தொடர்பாக செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

தேர்தல் தொடர்பாக 16.04.2019 காலை 10.00 மணி முதல் 18.04.2019 இரவு 12.00 மணி வரை மதுபானக் கடைகள் மூடப்பட்டிருக்கும்.

சி–விஜில் செயலி மூலம் இதுவரை 2159 புகார்கள் பெறப்பட்டு 946 புகார்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டும், 1181 புகார்கள் தள்ளுபடி செய்யப்பட்டும், 32 புகார்கள் நிலுவையிலும் வைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் பணிக்காக ஏறக்குறைய 6000 மண்டல குழுக்கள்(Zonal Teams) அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழுவும் 10 முதல் 12 வாக்குச் சாவடிகளின் பணிகளைக் கண்காணிக்கும்.

தேர்தல் பணியினை முன்னிட்டு, பறக்கும் படை மற்றும் நிலை கண்காணிப்பு குழு ஆகியவற்றின் மூலம், ரொக்கபணமாக ரூ.128.33 கோடியும், விலையுயர்ந்த உலோகங்கள் ரூ.284.12 கோடி மதிப்பிலும் (இதில் 989.61 கிலோ தங்கம் 280.45 கோடி மதிப்பிலும், 611 கிலோ வெள்ளி ரூ.2.48 கோடி மதிப்பிலும் அடங்கும்), மதுபான வகைகள் ரூ.34.42 இலட்சம் மதிப்பிலும், ( இதில் 951 லிட்டர் பிராந்தி மற்றும் ரம் வகைகளும், 410 லிட்டர் பீர் வகைகளும், 17675 லிட்டர் எரி சாராயமும் அடங்கும்), போதைப்பொருள் வகைகள் ரூ.29.84 இலட்சம் மதிப்பிலும், மடிக்கணினி, குக்கர், சேலை, துணி வகைகள் ரூ.7.77 கோடி மதிப்பிலும், சேர்த்து மொத்தம் ரூ.420.87 கோடி மதிப்பில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாகு, இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9